

ஸ்ரீ:

# நாச்சியார் திருமொழி

---

## தனியன்

அல்லிநாள்தாமரைமேலாரணங்கினிந்துணைவி *
மல்லிநாடாண்டமடமயில்-மெல்லியலாள் *
ஆயர்குலவேந்தனாகத்தாள் * தென்புதுவை
வாயர்பயந்தவிளக்கு.

---

## 1 ஆம் திருமொழி - தையொருதிங்களும்

---

@ தையொருதிங்களும்தரைவிளக்கித்
தண்மண்டலமிட்டுமாசிமுன்னாள் *
ஐயநுண்மணற்கொண்டுதெருவணிந்து
அழகினுக்கலங்கரித்துஅனங்கதேவா! *
உய்யவுமாங்கொலோவென்றுசொல்லி
உன்னையுமும்பியையும்தொழுதேன் *
வெய்யதோர்தழலுமிழ்சக்கரக்கை
வேங்கடவற்குஎன்னைவிதிக்கிற்றியே. (1)

வெள்ளைநுண்மணற்கொண்டுதெருவணிந்து
வெள்வரைப்பதன்முன்னம்துறைபடிந்து *
முள்ளுமில்லாச்சுள்ளியெரிமடுத்து
முயன்றுஉன்னைநோற்கின்றேன்காமதேவா! *
கள்ளவிழ்பூங்கணைதொடுத்துக்கொண்டு
கடல்வண்ணனென்பதோர்பேரெழுதி *
ஊப்ள்ளினைவாய்பிளந்தானென்பதுஓர்
இலக்கினிலுபுகஎன்னைஎய்கிற்றியே. (2)

மத்தநன்னறுமலர்முருக்கமலர்கொண்டு
முப்போதும்உன்னடிவணங்கி *
தத்துவமிலியென்றுநெஞ்செரிந்து
வாசகத்தழித்துஉன்னைவைதிடாமே *
கொத்தலர்பூங்கணைதொடுத்துக்கொண்டு
கோவிந்தனென்பதோர்பேரெழுதி *
வித்தகன்வேங்கடவாணனென்னும்
விளக்கினில்புகஎன்னைவிதிக்கிற்றியே. (3)

கவரில்புராண! நின்பேனெழுதிச்
சுறவநற்கொடிக்களும்துரங்கங்களும் *
கவரிப்பிணாக்களும்கருப்புவில்லும்

காட்டித்தந்தேன்கண்டாய்காமதேவா! *
அவரைப்பிராயம்தொடங்கி என்றும்
ஆதரித்தெழுந்தஎந்தடமுலைகள் *
துவரைப்பிரானுக்கேசங்கற்பித்துத்
தொழுதுவைத்தேன்ஒல்லைவிதிக்கிற்றியே. (4)

வானிடைவாழும்அவ்வானவர்க்கு
மறையவர்வாள்வியில்வகுத்தஅவி *
கானிடைத்திரிவதோர்நரிபுகுந்து
கடப்பதும்மோப்பதும்செய்வதொப்ப *
ஊனிடையாழிசங்குத்தமர்க்கென்று
உன்னித்தெழுந்தஎன்தடமுலைகள் *
மானிடவர்க்கென்றுபேச்சுப்படில்
வாழகில்லேன்கண்டாய்மன்மதனே! (5)

உருவிடையார்இளையார்கள்நல்லார்
ஓத்துவல்லார்களைக்கொண்டு * வைகல்
தெருவிடைஎதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவேநோற்கின்றேன்காமதேவா! *
கருவுடைமுகில்வண்ணன்காயாவண்ணன்
கருவிளைபோல்வண்ணன்கமலவண்ணத் *
திருவுடைமுகத்தினில்திருக்கண்களால்
திருந்தவேநோக்கெனக்கருள்கண்டாய். (6)

காயுடைநெல்லொடுகரும்பமைத்துக்
கட்டியரிசிஅவலமைத்து *
வாயுடைமறையவர்மந்திரத்தால்
மன்மதனே! உன்னைவணங்குகின்றேன் *
தேசமுன்னளந்தவந்திரிவிக்கிரமன்
திருக்கைகளால்என்னைத்தீண்டும்வண்ணம் *
சாயுடைவயிறும்எந்தடமுலையும்
தரணியில்தலைப்புகழ்தரக்கிற்றியே. (7)

மாசுடையுடம்பொடுதலையுலறி
வாய்ப்புறம்வெளுத்துஒருபோதுமுண்டு *
தேகடைத்திறலுடைக்காமதேவா!
நோற்கின்றநோன்பினைக்குறிக்கொள்கண்டாய் *
பேசுவதொன்றுண்டுஇங்குஎம்பெருமான்!
பெண்மையைத்தலையுடைத்தாக்கும்வண்ணம் *
கேசவநம்பியைக்கால்பிடிப்பா
ளென்னும் இப்பேறுஎனக்குஅருள்கண்டாய். (8)

தொழுதுமுப்போதும்உன்னடிவணங்கித்
தூமலர்தூய்த்தொழுதேத்துகின்றேன் *
பழுதின்றிப்பார்க்கடல்வண்ணனுக்கே
பணிசெய்துவாழப்பெறாவிடில்நான் *
அழுதழுதலமந்தம்மாவழங்க
ஆற்றவும்அதுஉனக்குஉறைக்கும்கண்டாய் *
உழுவதோரெருத்தினைநுகங்கொடுபாய்ந்து
ஊட்டமின்றித்துரந்தாலொக்குமே. (9)

@ கருப்புவில்மலர்க்கணைக்காமவேளைக்
கழலிணைபணிந்துஅங்குஓர்கரியலற *
மருப்பினையொசித்துப்புள்வாய்பிளந்த
மணிவண்ணற்குஎன்னைவகுத்திடென்று *
பொருப்பன்னமாடம்பொலிந்துதோன்றும்
புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை *
விருப்புடையிந்தமிழ்மாலைவல்லார்
விண்ணவர்கோனடிநண்ணுவரே. (10)

அடிவரவு: தை வெள்ளை மத்தம் சுவர் வானிடை உரு காயுடை மாசுடை தொழுது கருப்பு நாமம்.

---